பகுதியிலே இத்திட்டம் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் அதைப்போல பாகலூர் பகுதியைப் பொறுத்தவரை தனியாருடைய நிலங்களை ஆர்ஜிதம் செய்கிறபோது நீதிமன்றத்திற்குச் சென்று பிற்காலங்களிலே அதிக விலை நிர்ணயம் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால் தற்போது பேச்சுவார்த்தை மூலம் நிலங்கள் தேர்வு செய்யப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே.ஏ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியிலே தெலுங்கு பேசக்கூடிய மக்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் நம்முடைய அரசு விளம்பரங்கள் சூளகிரி பகுதியிலே சென்றடைவதில்லை. ஆகவே, இந்தக் காலக்கெடுவை நீட்டித்துக் கொடுத்தால் நிறைய விண்ணப்பங்கள் வர வாய்ப்பிருக்கிறது என்பதைச் சொல்லி, மீண்டும் அந்தத் திட்டத்தைப் பரிசீலிக்க அரசு விரும்புகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 100 மனுக்களை பெற்றுத் தருவார்களேயானால், இது குறித்து அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 10, திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

10—

கீழப்பாவூர், ஆலங்குளம் பகுதியில் காய்கறிகளைப் பாதுகாக்க குளிர்சாதனக் கூடம் அமைத்தல்.

**35894*—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர், ஆலங்குளம் பகுதியில் விளையும் காய்கறிகளைப் பாதுகாக்க குளிர்சாதனக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் கீழப்பாவூர் ஆலங்குளம் பகுதிகளில் காய்கறிகளை பாதுகாக்க குளிர் சாதனக் கூடம் (Cold Storage) அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

1994 நவம்பர் 4]

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கீழப்பாவூர், ஆலங்குளம் பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் காய்கறிகள் பயிரிடுகிறார்கள். ஆனால், இந்தக் காய்கறிகள் விளைந்து வந்தவுடன் அவற்றிற்கு நல்ல விலைகள் கிடைக்காமல்,—ஏனென்றால் இவை பெரிஷபல் கமாடிட்டியாக அழுகக்கூடியவையாக இருப்பதால்,—அதை உடனடியாக வியாபாரிகள் என்ன விலை வைத்தாலும் கொடுக்க வேண்டிய சூழ்நிலை விவசாயிகளுக்கு இருப்பதால், அவர்களுக்கு நல்ல விலையும் கிடைப்பதில்லை. அதனால் அவர்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். அந்தப் பகுதியிலே ஒரு குளிர் சாதனக் கூடம் அமைத்துக் கொடுத்தால் வசதியாக இருக்கும், விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதற்கு அது வாய்ப்பாக இருக்கும் என்பதால், அதை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காய்கறிகள், பழங்கள் அழுகக்கூடியவைகள் என்பதை அரசு அறியும். அறிந்ததற்குப் பின்னர்தான், தமிழக அரசினுடைய சார்பாக அதாவது தமிழ்நாடு வேளாண்மை விற்பனைத் துறையின் சார்பாக இவ்வாண்டு, நடப்பாண்டிலே மூன்று இடங்களிலே குளிர் சாதனக் கூடம் அமைக்க தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 3 கோடி ரூபாய்க்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். எனவே, அதிகமாக காய்கறிகள் பயிரிடக்கூடிய திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் ஒட்டன்சத்திரத்தில் ஒன்றும், மாம்பழங்கள் அதிகமாக பயிரிடக்கூடிய தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியில் ஒன்றும், திருச்சி மாவட்டத்தில் வாழைப்பழத்திற்காக ஒன்றும், ஆக மூன்றுக்கும் தலா ஒரு கோடி ரூபாய் வீதம் 3 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். முதற்கட்டமாக இவை நிறைவேற்றப்படும். பின்னர் தேவைக்கேற்ப படிப்படியாக விஸ்தரிக்கப்படும்.

முற்பகல் 10.35

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் கூடுதலாக்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எங்கள் பகுதியில் வெங்காயம், வெண்டைக்காய், கத்திரிக்காய், பூசனிக்காய் போன்ற காய்கறிகள் எல்லாம் அதிகமாகப் பயிரிடப்பட்டு அருகாமையில் உள்ள கேரளாவுக்கு இங்கிருந்து ஏற்றுமதி செய்கிறார்கள். அந்தக் காய்கறிகளை அந்தப் பகுதிகளுக்கு பதப்படுத்தி அனுப்பினால் நமக்கு வருமானம் கிடைக்கும். அதாவது இந்த 'கோல்ட் ஸ்டோரேஜ்' வைப்பதன் மூலமாக அரசாங்கத்திற்கும் வருமானம்

கிடைக்கும், பொதுமக்களுக்கும் வசதியாக இருக்கும். எனவே எங்கள் பகுதியில் இதை அமைத்துக் கொடுக்க அரசு முன்வர வேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் வேளாண்மைத்துறையும், தோட்டக்கலைத் துறையும் ஆய்வு செய்து வருகின்றன. எந்த எந்தப் பகுதியில் எந்தெந்தப் பயிர்கள் அதிகமாகப் பயிரிடப்படுகின்றன என்பதை ஆய்வு செய்ததற்குப் பின்னால் பல்வேறு தொடர் நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கக்கூடிய பகுதியில் காய்கறிகள் பயிரிடப்பட்டு அவை அருகிலிருக்கின்ற கேரள மாநிலத்திற்குச் செல்வதாகக் கூறினார்கள். மகிழ்ச்சி. அனைத்து வசதிகளையும் அரசாங்கமே செய்து கொடுக்கிற பணியில் ஈடுபட முடியாது. எனவே தனியார் இதுபோன்ற தொழில்களைத் துவங்க முன்வந்தால் அவர்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் அரசாங்கம் செய்து தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 11, திரு. வ.மு. சுப்பிரமணியம், மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்.

11—

ஒரே வரி விதிப்பு முறையைக் கையாளுதல்

***35160—திரு. வ.மு. சுப்பிரமணியம் :**

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விற்பனை வரி, உபரி வரி, உபரி மேல் வரி, கூடுதல் வரி இவை அனைத்தையும் இணைத்து ஒரே வரி விதிப்பு முறையைக் கையாள அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விற்பனை வரி, உபரி வரி, உபரி மேல் வரி, கூடுதல் வரி இவைகளை ஒருங்கிணைத்து ஒரே வரிவிதிப்பு முறையைக் கொண்டு வருவதற்கு அரசு தற்போது தயாராக இல்லை.

(ஆ) இப்போது விளக்கம் தேவையில்லை.